## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா வி நேரம்
## வினா 326
## "காயத்திரி மந்திரமும் ப்ரேமை மற்றும் ஆனந்தமும்"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் இரண்டு பக்கம் 212-217 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.

கேள்வி:ஸ்வாமி உயர்ந்த காயத்திரி மந்திரம் நம் புண்ணிய பாரதத்தில் பண்டைகாலந்தொட்டு துதிக்கப்படுகின்றது.இந்த காயத்திரி மந்திரத்தின் உயர்வை தங்களிடம் இருந்து அறிந்து கொள்ள விரும்புகிறோம் ஸ்வாமி. இதை பெண்கள் மற்றும் அந்தணர் அல்லாதோர் உச்சரிக்க கூடாது என்றும் கூறப்படுகிறது.இந்த மந்திரத்தை எல்லா காலங்களிலும் ஜபிக்கலாமா.அல்லது குறிப்பிட்ட கால நேரங்களில் மட்டும் தான் ஜபிக்க வேண்டுமா.

ஸ்வாமியின் பதில்:புனிதமான காயத்திரி மந்திரத்தை அனைவரும் கட்டாயம் ஜபிக்க வேண்டும்.இது கால நேர இட தேசாபிமானங்கள் மற்றும் ஜாதிய பாலின வேறுபாடுகளை கடந்து அனைவருக்கும் பொதுவானது.இந்த ஒரு மந்திரத்தை மட்டும் அனைவரும் தொடர்ந்து உச்சரித்து கொண்டே இருக்க வேண்டும்.

காயமுலு என்றால் புலனடக்கம் என பொருளாகும்.காயத்திரி மந்திரம் புலனடக்கத்தை பெறுவதற்கு உறுதுணையாக உள்ளது.காயத்திரி மந்திரம் மூன்று அம்சங்களை கொண்டது.காயத்திரி,சாவித்திரி,சரஸ்வதி என்பதாகும்.முதலில் வருகின்ற
பூர்புவஸ்வஹ என்பது வேறு வேறு உலகங்களை குறிப்பதல்ல.

இது ஒரே வார்த்தை தான்.மூன்று வார்த்தைகள் அல்ல.
இரண்டாவதாக வருகின்ற தத்ஸவிதுர்வரேண்யம் என்பது உயிர் சக்தியை குறிப்பதாகும்.உயிர் இல்லை என்றால் உடல் செயல்பட முடியாது.

மூன்றாவது ஆன பர்கோதேவஸ்யதீமஹி என்பது பிரணவத்தை குறிப்பதாகும்.ஓம் என்பது மூன்று சப்தங்களை கொண்டது.அ- என்பது தொப்புளிலிருந்தும் உ- என்பது தொண்டையிலிருந்தும் ம்- என்பது உதடுகளிலிருந்தும் உச்சரிக்கப்படுகிறது.மூச்சை உள்ளிழுக்கும் போது ஸோ என்றும் வெளிவிடும் போது ஹம் என்றும் சப்தம் வருகிறது.இதுவே ஜப காயத்திரி ஆகும்
இந்த ஸோஹம் சப்தமானது ஒரு நாளைக்கு 21600 முறை எழுகிறது.
ஸோ என்பதில் உள்ள இரண்டாவது சப்தமான -ஓ என்பதும் ஹம் ல் உள்ள இரண்டாவது சப்தமான -ம் என்பதும் சேர்வதே ஓம் ஆகும்.இந்த ஸோஹம் என்ற சப்தமானது விழிப்பு நிலை கனவு நிலை ஆழ்ந்த உறக்க நிலை என மூன்று நிலைகளிலும்

ஒலித்த வண்ணம் இருக்கிறது.உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் உள்ள அகர வரிசை எழுத்துக்கள் ஓம் என்ற பிரணவத்திலிருந்து தான் பிறந்தன.

உதாரணமாக ஆங்கில மொழியில் ஏ யிலிருந்து இஸட் வரை 26 அகரவரிசை எழுத்துக்கள் உள்ளன.இவற்றை கொண்டு தான் அனைத்து ஆங்கில வார்த்தைகளும் பேசப்படுகின்றன,எழுதப்படுகின்றன.

அது போலவே ஹார்மோனியம் என்ற இசைகருவியிலிருந்து ச ரி க ம ப த நி என்ற ஏழு ஸ்வரங்கள் எழுகின்றன.இவற்றை கொண்டு தான் பல்வேறு ராகங்கள் இயற்றப்படுகின்றன.வயலின் என்ற இசைகருவியை கொண்டு நீங்கள் எந்த விதமான மெட்டும் அமைக்கலாம்.அதை போலத்தான் ஓம் காரம் என்பதே அனைத்து சப்தங்களுக்கும் அடிப்படையாகும். அதிலிருந்து தான் மற்ற சப்தங்களே பிறக்கின்றன.
உங்கள் காதுகளை இறுக மூடிக்கொண்டு உன்னிப்பாக கவனித்தால் உங்கள் உள்ளேயே நீங்கள் ஓம்கார சப்தத்தை கேட்க முடியும்.ஒரு மின்சார கம்பத்தின் அருகில் சென்று அதில் காதை வைத்தால் ஓம்கார ஒலியை கேட்க முடியும்.

மௌனத்தில் கேட்கப்படுவது ஓம்கார தெய்வீக
சப்தமாகும்.
எனவே உடலளவில் காயத்திரி,உயிர் சக்தியாக சாவித்திரி,ஓம்காரமாக சரஸ்வதி இந்த மூன்றும் சேர்ந்ததுதான் காயத்திரி மந்திரமாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி தங்களுக்கு நாங்கள் எவ்வாறு சேவை செய்வது.தங்களை எவ்வாறு ஆராதிப்பது.இதற்கு எங்களுக்கு வழி காட்டுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:கடவுளுக்கு உங்கள் ஆராதனையோ சேவையோ தேவையில்லை.கடவுள் உங்களிடமிருந்து பிரேமையை மட்டுமே எதிர்பார்க்கிறார்.இந்த ப்ரேமை என்பது உருவாக்கப்ப டுவதோ,கொடையாக கொடுக்கப்படுவதோ,குருவினிடமிருந்து பெறப்படுவதோ அல்ல.பிறக்கும் போதே கடவுளின் கொடையான ப்ரேமையுடன் தான் பிறக்கிறீர்கள்.

அவரிடமிருந்து பெற்ற கொடையை அவரை முழுமையாக நேசிப்பதின் மூலம் அவருக்கே திருப்பி செலுத்த வேண்டும்.

திருமண விழாவில் உபயோகப்படுத்திய பாத்திரங்களை எப்படி பத்திரமாக திருப்பி கொடுக்கிறீர்களோ அது போல உங்கள் ஹிருதயம் என்னும் பாத்திரத்தில் கடவுள் கொடுத்த கொடையான ப்ரேமையை இட்டு நிரப்பி அதை கடவுளுக்கே திருப்பி கொடுக்க வேண்டும்.அதுவே உண்மையான இறை வழிபாடு ஆகும்.

கடவுளை எப்படி நேசிப்பது என கேட்டால் கடவுளை நேசிப்பதற்கு சிறந்த வழி அனைத்து உயிகளையும் நேசித்து அனைவரைக்கும் சேவை செய்வதுதான்.

கடவுள் இந்த சிருஷ்டியை படைத்த சிருஷ்டி கர்தாவாக இருக்கும் போது அதாவது அவரே அனைத்தையும் கொடுப்பவராக இருக்கும் போது அவர் மற்றவர்களிடமிருந்து பெறுவதற்கு என்ன இருக்கிறது.

தூய இதயம் இறைவன் வசிக்கின்ற கோயிலாகும்.
எண்ணம் சொல் செயல் இவை மூன்றும் இணைந்து செயல்படும் போது இதயம் தூய்மையாகிறது.ஆனால் இன்றோ எங்கும் சுயநலத்தையே பார்க்க வேண்டி உள்ளது.வெளியே பேசுவது போல் நடந்து கொள்ளாமல் உள்ளே சுய நலத்துடனேயே நடந்து கொள்கிறார்கள்.

உண்மையான இறை வழிபாடு என்பது தன்னலம் இல்லாமல் அன்புடன் பிறருக்கு செய்யபடுகின்ற சேவைபணியே ஆகும். மனிதனுக்கு செய்யபடுகின்ற சேவை அந்த மகாதேவனுக்கே செய்கின்ற சேவையாகும்.

இறைவனை சாதாரண மலர்களால் அர்சிப்பதை விட நற்பண்புகள் மற்றும் நன்னடத்தை என்ற ஹிருதய புஷ்பங்களால் அர்சிப்பதே சிறந்த வழிபாடாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்கள் எப்போது ஆனந்தப்ரபதி அதாவது நித்யானந்தத்தையும் துக்கநிவ்ருதியையும் பெற முடியும் என தயவுசெய்து எடுத்து கூற முடியுமா ஸ்வாமி

சந்தோஷம் துன்பம் இரண்டுமே ஒன்றுக்கொன்று சம்மந்தப்பட்டவை.இன்பம் என்பது துன்பம் இல்லாதிருப்பது.எனவே துன்பம் இல்லாதிருக்கும் நிலையை அடைய முயற்சி செய்யும் போது இன்பம் தானாகவே வந்து விடும்.

துன்பத்திற்கு காரணம் அறியாமையே.அறியாமைக்கு காரணம் அகந்தையாகும்.
அகந்தைக்கு காரணம் பற்று.நான் இந்த உடல் மட்டுமே என எண்ணுவது.

ஆனால் ஒருவர் உலகியலாகவும் அதேசமயம் ஆன்மீக ரீதியாகவும் ஆனந்தமுடன் இருக்க புலன்களை கட்டுக்குள் வைக்க வேண்டும். மனிதன் இயல்பிலேயே ஆனந்த மயமானவன்.எனவே சோகத்தை அகற்றுவதற்கான வழியை கண்டறிய வேண்டும்.ஆன்மீக பாதையில் செல்வதன் மூலமும் மற்றும் பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலமும் சோகத்தை அகற்றி விடலாம்.

சோம்பேறி குதிரையை உட்காரவைத்து உணவளித்துகொண்டேயிருந்தால் அது மேலும் சோம்பேறியாகத்தான் ஆகும்.அது போல புலன்களின் விருபத்தின்படி நடக்க ஆரம்பித்தால் நீங்கள் மிருகமாகவே ஆகி விடுவீர்கள்.

மனிதன் மூன்று வகையான துன்பங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.முதலாவது உடல்ரீதியாகவும் மன ரீதியாகவும் துன்பத்திற்கு ஆளாவது.மனதளவில் துயருறும் போது அது உடலையும் பாதிக்கிறது.இரண்டாவது விலங்குகள் மற்றும் பூச்சிகளினால்

வெளிப்புற காயங்களுக்கு ஆளாகி துன்பபடுவது. மூன்றாவது இயற்கை பேரழிவு ஏற்பட்டு அதனால் துன்பத்திற்கு ஆளாவது.

அடிப்படையில் உங்கள் மனமே துன்பம் இன்பம் இரண்டிற்கும் காரணமாக இருக்கின்றது.

மனதை அன்பினால் நிரப்புங்கள்.எப்போதும் கடவுளை பற்றி சிந்தித்த வண்ணம் இருங்கள்.கடவுள் மீது மீண்டும் மீண்டும் நம்பிக்கையை அதிகமாக்கி கொண்டே இருங்கள்.ஆன்மீக பயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வாருங்கள்.அப்படி வாழ்ந்து வந்தால் துன்பங்களை அகற்றி விட முடியும்.

நீங்கள் வெறும் உடலல்ல.நீங்களே ஆத்மா என்ற உண்மையை உணரும் போது ஆத்மானந்தத்தை அனுபவிப்பீர்கள்.அவ்வாறாக இன்ப துன்பம் இல்லாத ஏகாக்கிரக நிலையை அடைவீர்கள்.இதுவே பிரக்ஞானம் பிரம்மா என்ற உயரிய ஞான நிலையாகும்.பிரக்ஞானம் என்பதே தெய்வீகமாகும்.இது உடல் மனம் புத்தி என எங்கும் பரவியிருக்கின்றது.அதுவே உங்கள் உள்ளிருந்து ஒலிக்கும் தெய்வத்தின் குரலாகும்.புலனடக்கத்தை சாதித்து விட்டால் இந்த தெய்வத்தின் குரலை நீங்களும் கேட்க முடியும்.கேட்டு அதன் படி செயல்பட்டு ஆனந்த்தை அனுபவிக்க முடியும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமியின் அருளைரைகளை மேலும் கேட்டு மகிழ்வோம்.

**ஜெய் சாயிராம்.**